**இலங்கை ஹுதபிம அதிகாரசபை (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி மத்திய அதிகாரசபை) - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஹுதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி மத்திய அதிகாரசபை) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21(ஊ) பந்தியின் பிரகாரம் பந்தியின் பிரகாரம் 2014/2015 ஆம் ஆண்டுகளில் விற்பனை மேம்படுத்தல் பிரிவில் இடம் பெற்றிருந்த நிதி மோசடிகளுக்குரிய தகவல்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுகளில் மொத்தம் ரூபா 21,597,024 ஆன மீள் மதிப்பீட்டு பெறுமதி ஒன்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 90 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படுத்தல்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபையின் இருப்புக்களை மதிப்பீடு செய்யும் போது முதலில் வந்தது முதலில் விநியோகித்தல் (FIFO) பின்பற்றப்பட்டு இருந்த போதும் 06 இருப்பு அலகுகளின் பெறுமதி முதலில் வந்தது முதலில் விநியோகித்தல் முறைமையின் பிரகாரம் ரூபா 16,239,408 ஆக இருந்த போதும் அந்த இருப்புக்கள் இறுதியாக கொள்வனவு செய்த பெறுமதி அடிப்படையில் ரூபா 17,156,210 இற்கு கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் இருப்பின் பெறுமதி ரூபா 916,802 ஆல் அதிகரித்திருந்தது | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டின் நவம்பர் 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 15 வாகனங்கள் மற்றும் 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி மீள் மதிப்பீடு செய்யப்பட்ட விவசாயம் சார்ந்த 07 உள்ளீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் பெறுமான தேய்வு ரூபா 6,249,625 தொகை கணக்கு வைப்பதற்கு மேலதிகமாக காலக்கழிவு செய்த காரணத்தினால் அப்பெறுமதிக்கு சமமான கால கழிவு வருமானம் ஒன்று கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் மிகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டு இருந்தது | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் அதிகாரசபையின் 06 ஊழியர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,421,814 ஆக இருந்த போதும் அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,054,639 என காண்பிக்கப்பட்டதன் பேரில் ரூபா 367,175 ஆன வேறுபாடு காணப்பட்டது | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் இருப்பு பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விவசாய உபகரணங்களின் இருப்பு மீதி ரூபா 27,440,806 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் விவசாய உபகரணங்களின் பெறுமதி ரூபா 16,441,967 என கணக்கீடு செய்த காரணத்தினால் விவசாய உபகரணங்களின் பெறுமதி ரூபா 10,998,840 ஆல் நிதிக் கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த விவசாய உள்ளீடுகள் இருப்புகள் கணக்கிலிருந்து தவறுதலாக அகற்றப்பட்டமையால் இந்த ரூபா 10,998,840 ஆன வேறுபாடு காணப்பட்டது இருப்புக்களை கைதவிர்த்தமையால் | கணக்கு மீதிகள் சரியாக இருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 13,256,367 கூட்டுத்தொகையான விவசாய உபகரணங்கள் விநியோகித்தல் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | செலவினமாக கருதக் கூடிய ரூபா 13,256,367 ஆன செலவினமாக கணக்கீடு செய்யப்படவில்லை என்பதாக | |
| (உ) காசுப் பாய்ச்சல் கூற்றுக்கு தாக்கம் ஒன்று இல்லாத மீள் மதிப்பீட்டின் சாதகங்கள் மற்றும் பாதகங்கள், மோட்டார் சைக்கில்களை கையளித்தல், கைதவிர்ப்பு, பெறுமானத் தேய்வு, விவசாய உள்ளீடுகளின் பெறுமானத் தேய்வுச் சீராக்கம் என்பவற்றின் சாதகம் மற்றும் பாதகங்களின் மொத்தம் 25,208,334 ஆன ஆதாணங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் ஆண்டில் இடம் பெற்றிருந்த காசுப் பாய்ச்சல் சீராக்கப்பட்டு அதன் தேறிய பெறுமதி ரூபா 19,598,834 தொகை காசுப்பாய்ச்சல் ஆக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டு இருந்தது | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | கணக்கு சரியாக செய்யப்பட வேண்டும். |
| (ஊ) 2018 ஆம் ஆண்டின் நவம்பர் 19 ஆம் திகதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 4 வாகனங்கள் அதன் ஆயுட்காலத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் நவம்பர் 19 ஆந் திகதி பெறுமானத் தேய்வு முடிவடைய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் 11 மாதங்களுக்கு உரிய ரூபா 5,469,588 தொகை பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 6,200,000 தொகை பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. இத் தவறினை சீராக்குவதாக குறிப்பிட்டு பிழையுடன் கூடிய 99 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் மொத்த பெறுமான தேய்வு அளவை மிகைத்த ரூபா 6,312,084 கூட்டுத்தொகையான பெறுமானத்தேய்வு அளவொன்று கணக்கில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 5,469,588 மற்றும் கூடுதலாக பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 112,384 தொகை உட்பட ரூபா 5,581,972 ஆல் ஆண்டின் செலவினம் நிதிக் கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) நடைமுறை பொறுப்புக்கள் | 4,106,799 | பட்டோலைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் | கருத்து தெரிவிக்கவில்லை | ஆவணங்கள், படடோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) உரித்து | 994,184 | பராமரிப்பதற்கான தேவைப்பாடு | கருத்து தெரிவிக்கவில்லை. | ஆவணங்கள், படடோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**
**பெற வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறை அல்லாத சொத்துக்களில் காண்பிக்கப்பட்டு இருந்த 2 முதல் 42 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இருந்து வரும் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய ரூபா 5,561,575 ஆன 04 கணக்கு மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை | நீண்டகாலமாக பெற வேண்டிய மீதிகளை பதிவழிப்பதற்கும் கடன்பட்டோர் மற்றும் வட்டி தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஏனைய மீதிகளை அறவிடுவதற்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக | பெறவேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காலா வதியான ரூபா 1,455,904 ஆன 130 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மாதங்களை மிகைத்த காசோலைகள் எவையென்பதை திட்டவட்டமாக இனங்காண முடியாதுள்ளதாக | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,279,737 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 18,878,424 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,598,687 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு பள்ளேகல பண்ணையில் ஏற்பட்ட நட்டம் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றம் செலவின விடயங்களில் போக்கு ஆய்வு

மீளாய்வாண்டில் அரசின் நிதி ஏற்பாடுகள் ரூபா 189,790,000 தொகை கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 177,901,203 செலவிடப்பட்டு ரூபா 11,888,797 சேமிக்கப்பட்டு இருந்தது. அதன்

பிரகாரம் மீளாய்வாண்டின் மிகை ரூபா 15,279,737 ஆக இருந்ததுடன் அதில் 78 சதவீதம் அரச நிதி ஏற்பாடுகளில் இருந்து சேமிப்பாக இருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அதிகாரசபைக்குரிய பள்ளேகல பண்ணையில் ரூபா 7,187,961 ஆன நட்டமும் கொத்மலை பண்ணையில் ரூபா 994,271 ஆன நட்டமும் ஏற்பட்டிருந்ததுடன் விற்பனை வருமானத்தை மிகைத்து செலவினங்கள் அதிகரித்தமை, வளங்களை உயர் செயற்திறனாக பயன்படுத்தாமை மற்றும் வீண் விரயம் காணப்பட்டதன் காரணமாக இவ்வாறு பண்ணைகள் நட்டம் அடைவதற்கு காரணமாக இருந்தன. இந்த நட்டத்தை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | கருத்து தெரிவிக்கவில்லை | வருமானம் மற்றும் செலவினம் திட்டமிடப்பட்டு முகாமைத்துவம் செய்யப்பட்டு நட்டத்தை தவிர்ப்பு செய்யப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வரயறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவுச் சங்கத்தினால் இலங்கை ஹதபிம அதிகார சபைக்குரிய விற்பனை பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த பெறுமதி மதிப்பிட முடியாத மேசைகள், கதிரைகள் இராக்கைகள், கணனி மற்றும் கணக்கிடும் இயந்திரங்கள் மற்றும் விற்பனை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த ஏனைய உபகரணங்கள் உட்பட 204 அலகுகளை 2019 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் தமது பொறுப்பிற்கு எடுக்கப்பட்டிருந்த போதும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அப்பொருட்களை கையளித்தலுக்காக அதிகாரசபையின் நிர்வாக சபை அங்கீகாரமொன்று கிடைத்திருக்கவில்லை மேலும் கடம்பே மற்றும் வெளிகமடையில் அமைந்துள்ள விற்பனை கட்டிடங்கள் வளவும் கூட்டுறவு சங்கத்தினால் பயன்படுத்தப்பட்டு | இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமா அதிபரிடம் விசாரிக்கப்பட்டுள்ளதாக | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வந்திருந்த போதும் அதற்காக அதிகார சபையின் நிர்வாக சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. | | |
| (ஆ) | வராப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணி ஒன்றில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,464,521 செலவிடப்பட்டு விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டுக் எடுக்காமல் இருக்கையில் மீளாய்வாண்டின் செப்தம்பர் 24 ஆம் திகதி அங்கு விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருந்தது அது தொடர்பாக சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 2,100,000 மற்றும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 900,000 தொகை அதிகாரசபையால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் போதிய அளவு மேற்பார்வை ஒன்று இல்லாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி திகதியில் விற்பனை நிலையத்தில் ரூபா 508,137 ஆன நட்டமன்று இடம் பெற்றிருந்தது | வராபிட்டிய பண்ணையில் ரூபா 2,239,491 ஆன நிலையான சொத்துக்கள் அதிகார சபையிடம் காணப்படுவதாக | சாத்தியவள ஆய்வு ஒன்றை மேற்கொண்டு திட்டமிடப்பட்ட வகையில் முறையான கண்காணிப்புடன் நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கண்ணொருவையில் அமைந்துள்ள அதிகாரசபையின் பிரதான நிர்வாக கட்டிடத்துடன் கூடிய 01 ரூட் 28.1 பேர்ச் அளவிலான காணி மற்றும் 5 ஏக்கர் அளவிலான கொத்மலை பண்ணையின் காணி என்பன அதிகாரசபைக்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கவில்லை | காணிகளை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |